செய்தி வெளியீடு எண் : 03 நாள் :02.12.2020

**தேனி மாவட்டம்**

**பேரிடர் முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் - நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு முதன்மை செயலாளரும், மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான திரு. அ.கார்த்திக், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது :-**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், பேரிடர் முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகள் குறித்த அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் இன்று (02.12.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.. அவர்கள் முன்னிலையில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு முதன்மை செயலாளரும், தேனி மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான திரு. அ.கார்த்திக், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டத்தில் பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தடுப்பு பணிகள் ஆகியன குறித்தும் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர், கோட்டாட்சியர்கள், நியமன அலுவலர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள், நகராட்சி சுகாதார அலுவலர்கள், பேரூராட்சி, ஊராட்சி உதவி இயக்குநர்கள் உட்பட பகுதி வாரியாக நியமிக்கப்பட்டுள்ள துறை சார்ந்த அலுவலர்களுடன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அரசு முதன்மை செயலாளர், தேனி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு, மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், தற்சமயம் அதற்கான மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், அனைத்து துறையினருக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு, குறிப்பாக ஆற்றங்கரைப்பகுதிகள், நீர்நிலைகளில் வசிக்கின்ற பொது மக்கள் கவனமுடனும், முன் எச்சரிக்கையுடன் இருக்கவும், விளையாடவோ, குளிக்கவோ, துவைக்கவோ மற்றும் வேறு காரணங்களுக்காகவோ நீர்நிலைகளுக்கு செல்ல வேண்டாமெனவும், சுற்றுப்புறங்களை சுத்தமாகவும், சுகாதாரமாக வைத்திடவும் உள்ளாட்சி அமைப்பினரால் விழிப்புணர்வு ஏற்படுத்தபடுத்தவும் அறிவுறுத்தினார்.

மேலும் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ள **43** பகுதிகளை கண்காணிப்பு குழு அலுவலர்கள் மற்றும் வட்ட அளவிலான கண்காணிப்பு குழு அலுவலர்களை தொடர்ந்து கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு ஆய்வு மேற்கொள்ளவும், அவசர காலங்களில் வெள்ளம் மழையினால் பாதிப்புக்குள்ளாகும் மக்களை தங்கவைத்திட தேர்வு செய்யப்பட்டுள்ள **66** தங்கும் இடங்களை தயார் நிலையில் வைக்கவும் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

வடகிழக்கு பருவமழை காலங்களில் வெள்ளத்தினால் பாதிப்புகள் ஏற்படும் போது பொது மக்களை மீட்க நியமிக்கப்பட்டுள்ள **195** நீச்சல் வீரர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் தொலைபேசி எண்கள், **2** நாரிழை படகுகள் மற்றும் **117** பரிசல்கள், மீட்கக் கூடிய உபகரணங்கள், பொது மக்களை மீட்க **71** மாநில பேரிடர் மீட்பு பயிற்சி பெற்ற குழுவினர், கால்நடைகளுக்கு பாதிப்பு ஏற்படின் அதற்கு தேவையான மருந்து பொருட்கள் மற்றும் உணவுப்பொருள்கள், பொதுமக்களுக்கு தேவையான மருந்து, மாத்திரைகள், அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மண்ணெண்ணெய், காலி சாக்கு பைகள், சாலைகளில் விழும் மரங்கள் மற்றும் பாறைகளை அகற்றிட மர அறுவை இயந்திரம், ஜே.சி.பி போன்ற இயந்திரங்கள், மின் கம்பங்கள் தயார் நிலையில் வைப்பது குறித்தும் எடுத்துரைத்தார்.

பொதுமக்கள் மழை, வெள்ளம் மற்றும் இயற்கை பேரிடர் தொடர்பான தங்களது புகார்களை 1077 என்ற கட்டணமில்லா தொலை பேசி எண்ணிலும், 04546-261093 என்ற எண்ணிலும் தெரிவிப்பதற்கு பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து மாவட்டத்தின் அனைத்துப்பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகள் தொடர்பாகவும் ஆய்வு மேற்கொண்டார்.

அந்தந்த பகுதிகளில் நியமிக்கப்பட்டுள்ள நியமன அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் மேற்கொண்ட மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். கொரோனா தடுப்பு பணிகளில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, வெகுவாக மாவட்டத்தில் கொரோனா பரவல் தடுக்கப்பட்டு, சிறப்பான பணியினை மேற்கொண்டதற்கு பாராட்டுகளை தெரிவித்தார். இப்பணியினை தொடர்ந்து மேற்கொண்டு, இதேபோன்று பேரிடர் கால சமயங்களிலும் சிறப்பான பணியினை மேற்கொண்டு பொதுமக்களை பாதுகாத்திட உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும், குறிப்பாக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தாங்கள் மேற்கொண்டு வரும் பணிகளை பாதுகாப்பாகவும், துரிதமாகவும் மேற்கொள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அரசு முதன்மை செயலாளர், தேனி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, பெரியகுளம் சார் ஆட்சியர் செல்வி டி.சிநேகா, இ.ஆ.ப., வேளாண்மைத்துறை இணை இயக்குநர் முனைவர் பி.அழகுநாகேந்திரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் பாண்டி, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர்(பொ) நிறைமதி பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) செயற்பொறியாளர் கார்த்திகையன், தமிழ்நாடு குடிநீா் வடிகால் வாரியம் செயற்பொறியாளர், மாவட்ட வழங்கல் அலுவலர், நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் பேரூராட்சி, ஊராட்சி துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**